சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திருமதி த.சிந்துஜா த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. சி.தர்மன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண். 58

நாள் : 11.09.2020
சார்வரி, ஆவணி 26
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை கடிதம் எண். எஸ்.10(3)/31971/2018, நாள் 19.03.2019 மற்றும் 09.01.2020.
3. அரசு ஆணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ.1)துறை, நாள் 23.01.2020.

-----

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திரு சி.தர்மன் பொதுப்பணித் துறையில் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், காஞ்சிபுரம் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்த போது 04.11.2006 அன்று காலமானார் என்றும், அவரது வாரிசுதாரரும்/ மகளுமான திருமதி த.சிந்துஜா என்பவர் தனக்குக் கருணை அடிப்படையில் பணி வழங்கக் கேட்டுக் கொண்டதின் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித் துறை, சென்னை அவர்களால் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திருமதி த.சிந்துஜா அவர்களுக்குப் பணி நியமனம் அளிக்கப்பட்டு 20.08.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார் என்றும், இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வித் தகுதியான இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பினை (S.S.L..C) மார்ச் 2002–இல் நிறைவு செய்துள்ளார் என்றும், தனியரின் பிறந்த நாள் 05.06.1987 என்றும் தெரிவித்து, தேவையான சான்றாவணங்களை அனுப்பி வைத்து தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 20.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திருமதி த.சிந்துஜா, இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 20.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண்.3182/க்யூ2/ 2020, நாள்.12.05.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண். 11942/ஜி2/ 2020–1, நாள் 20.05.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை.–5.
திருமதி த.சிந்துஜா, இளநிலை உதவியாளர்.
(முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5 வழியாக)
மாநில கணக்காயர், சென்னை –18.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை /
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

/True Copy Attested/

22.09.2020
பிரிவு அலுவலர்

22-9-20